Reg. No. M. 2997.

தனிப்பிரதி அணா 1.

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOUAYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து
வீதி நெ. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ-ஹூ ஆனி-மீ அ-உ (21—6—31) } No. 30.

திருமந்திரம்

திகைக்குரி யானொரு தேவனை நாடும்
வகைக்குரி யானொரு வாதி யிருக்கிற்
பகைக்குரி யாரில்லை பார்மழை பெய்யு
மகக்குறை கேடில்லை யவ்வுல குக்கே.

அவ்வுல கத்தே யிறந்தவ் வுடலோடு
மவ்வுல கத்தே யருந்தவ நாடுவ
ரவ்வுல கத்தே யரனடி கூடுவ
ரவ்வுல கத்தே யருள்பெறு வாரே.

கோண்ட குறியுங் குலவரை யுச்சியு
மண்டரு மண்டத் தமரரு மாதியு
மெண்டிசை யோரும்வந் தென்கைத் தலத்தினு
ளுண்டெனி னுமினி யுய்ந்தொழிந் தோமே.

உ

திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.
(திருவாசகம்)

வித்தகம்

புதுவை.

பவ-௵ ஆனி-௴ 8௳

அடியார் இயல்

அடியார் இயல் என்பது ஈண்டு ஒரு சிறிது விளக்கமுற உரைக்கப்படும். எல்லாம் வல்ல சித்தனாகிய சற்குரு நாதன் சடபேதம் கர்ம பேதம் என்பனவற்றிற்கு ஏற்ப விதிக்கும் சாதகங்களை—வேதாகம கட்டளைகளை வழுவறத் தாங்கி ஒழுகிப் படியேற்றம் பெறுதலே அடியார் இயல் என்னும் அடியவர் இலக்கணம் என்று கூறப்படும். குருநாதன் விதிக்கும் சாதக யோக விதிகளைப் பக்குவ சீவர் வழுவறத் தாங்கி ஒழுகுவது அரிதினும் அரிதாம். சீவன் முத்தசாதற்கேற்ற பக்குவமுடையாரை அளவில்லாத கர்மங்கள் சங்கேதமாய்த் திரண்டு இடையீடின்றி அலைக்கும் என்பது சத்தியம். உலகத்தில் அக் கர்மங்கள் அவர்களை எவ்வளவாக இழிவுபடுத்த வேண்டுமோ அவ்வளவாக இழிவு படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆயினும் அவ்வளவு துன்பங்களையும் குருவருளால் அநுபவித்துத் தொலைத்துபிராரத்தகநுவாகிய மாயாதநு மாறப் பெற்றபின் அவர்கள் அமல வடிவமானது பார்ப்பவர் கண்களுக்குத் தூலமாகவே தோன்றினும், அவர்கள் அவித்தை என்னும் மாயையை அடிமை கொண்டவர்களாதலால் நித்தியானந்தர்களாய் வதிவார்கள். இவ்வாறு சிலகாலம் வதிந்து—உலக குரவராய்ப் பல அருட் புதுமைகளால் உண்மையை நிலைநாட்டி அமலமடைந்து சூக்குமமான அவ் ஓ வடிவமும் காலக்கிரமத்தில் கரைய உலகு கண்டு போற்ற மறைந்து உண்மை முத்தியடைவார்கள். எத்தனையோ சென்மங்களுக்கு வித்தாயுள்ள கர்மங்களையெல்லாம் ஒரே சென்மத்தில் முற்றாக அநுபவித்துத் தொலைப்பது என்றால் முடியுமா? ஆதலால் குருநாதன் விதிப்படி வழுவற ஒழுகுங்கால் அவ்வினைகள் லேசமான அநுபவமாய் வந்து வந்து கழியும். அநுபவிக்காமல் குருவருளால் — குருவால் விதிக்கப்படும் பல கிரியைகளை வழுவற உஞற்றுவதால் நீக்கப்படுவனவும் உண்டு. மெய்யடியாரென வதிந்த எம் பெருமக்களுள்ளே ஆற்றொணாத் துன்பம் அடையாமல் அடிமையடைந்தவர் உளரோ? இல்லை, இல்லை, இல்லை. அம் மெய்யடியாரைக் கண்டால் நாட்டார் நகைப்பர்; "இவன் ஓர் உன்மத்தன், நயவஞ்சகன், திருடன், தடியன், சூதன், சோம்பேறி, பிழைக்கும் வழியறியா மடையன்" எனவும் பிறவுமாகப் பலப்பல இழிவுரைகளால் தோத்திரஞ் செய்வர். ஆயத்தார் நட்டார் அனைவரும் தம்தம் முட்டைமதிக்கு ஏற்பக் காரணம் கற்பித்துக் கொண்டு எவ் எவ்வகையால் இவனுக்குத் துன்பம் விளைக்க முடியுமோ அவ் அவ் வகைகள் எல்லாவற்றாலும் விளைப்பர். இவை அனைத்தையும் திருவருட்செயலெனக் கண்டு, பணிசெய்து கிடத்தலே தலையாய அறம் எனத் துணிந்து இகலுக்கு எதிர்சாயும் இவன் பண்பைக் கண்டு மனம் சகியாதவராய்—பொறாமை மேலீட்டினால் இவனைக் குடைந்து கடிவர். இவ்வாறு அறியாமை மலிந்த மாக்களால் மெய்யடியார் அடைந்த துன்பங்களை யாரால் அளவிட முடியும்? [திருவாசகம், போற்றித் திருவகவல் அடி 44-77; திருவம்மானை, செ. 6; திருப்பொற் சுண்ணம், செ. 7; திருத் தெள்ளேணம், செ. 3; பிரார்த்தனைப் பத்து, செ. 3; என்பனவற்றையும் பட்டினத்தடிகள் பாடல் பலவற்றையும் நோக்குக.]

எம்பெருமான் அன்பரை அடிமை கொள்வது என்பதன் பொருள் என்னை? அன்பு செய்பவர்க்குரிய அவவினை என்னும் மாயையை அகற்றியே எம்பெருமான் அடிமை கொள்ள வேண்டுமன்றி வேறு என்னை? ஆதலால் அவரவர் வினையை அருளால் லேசமாய் அநுபவிக்கச் செய்தும் அநுபவிக்காமல் நீக்கத் தக்கவற்றை நீக்கியுமே எம்பெருமான் அன்பரை அடிமை கொள்ள வேண்டும் என அறிக. மாயை என்பது விதியல்லவா? ஊழ் அல்லவா? ஆதலால் அம்மாயையுடன் சேர்ந்தே அம்மாயையை எந்த எந்த அமயத்து எந்த எந்த விதமாய் தனக்குள்ளே சிக்கச்செய்ய வேண்டுமோ அந்த அந்த விதமாய் அதனுடன் கலந்து அதனுட்புகுந்து அதனைத் தனக்குட் சிக்கச்செய்வதே "மாயையை அடிமை கொள்வது" என்பதன் பொருளாகும். இவ் அரிய பெரிய உண்மையையே பின்வரும் செய்யுளால் நன்கு விளக்கியருளினார் மணிவாசகப் பிரபு.

திருவாசகம்

அருளா ரமுதப் பெருங்கடல்வா யடியா
[ரெல்லாம் புக்கழுந்த
இருளாராக்கையிது பொறுத்தே
[யெய்த்தேன் கண்டா யெம்மானே
மருளார் மனத்தோர் உன்மத்தன்
[வருமாலென்றிங்கெனைக் கண்டார்
வெருளாவண்ணம் மெய்யன்பை
[யுடையாய் பெற நான் வேண்டுமே.

(ஷை பிரார்த்தனைப் பத்து செ. 3.)

முன்னிலையாகிய மாயையை உறவு செய்தற்கு அன்பே சிறந்த சாதனம் என்பது இதனால் வற்புறுத்தப்பட்டது.

அன்பர்களது அவவினையை எவ்வண்ணம் நடாத்தி அகற்ற வேண்டுமோ அவ்வண்ணம் நடாத்தி அகற்றி ஆட்கொள்வதே கடவுள் அருள் என்பது அல்லவா? ஆதலால் மாயையை வசப்படுத்த அறியாது அதனை வெறுத்து ஒருபால் ஒதுங்குவோர் அன்பராதற்கு உரியரோ?—அன்பர் எனப்படுவரோ? படமாட்டார். கர்மப்போராட்டங்களால் துன்பம் அடைந்த மெய்யடியார்களெல்லாம் தங்களைப்:பாவிகள் என்று இழித்துக் கூறி நைந்து நைந்து இரங்கியிருக்கின்றார்கள். (திருவாசகம், உயிருண்ணிப் பத்து செ. 10.)

ஒருவன் தன்னைப் பாவி என்றும் படிற்றொழுக்கம் உடையவனென்றும் உணர்வதற்கே பல சென்ம புண்ணியம் வேண்டும். சீவர்கள் தங்களைப் பாவிகளென்று உணர்வது முடியாத காரியம். தங்களை வினை ரூபங்கள் என்று அறியார்கள்; மற்றோ, எல்லாம் உணர்ந்தவர்கள் என்றும், பூரண அறிவாற்றல் உடையவர்கள் என்றும் துணிந்து வாழ்பவர்களேயாவர். "வினைப்போகமே ஒருதேகம் கண்டாய்" என்பது பட்டினத்தடிகள் திருவாக்கு. பலர் தம்மை வினைரூபமென்று பிறர் கூறினால் சீற்றம் கொள்வர். இதற்கு அறியாமையே காரணமாகும். சீவர் தாம் எடுத்த பிறப்பில் அநுபவிக்கும் கர்மங்களைக் கொண்டே தமது புண்ணிய பாவங்களை மதிப்பர். அடுத்த சென்மத்துக்குரிய வினை வித்து இது என அறியார். ஆகாமிய இயல்பையும் அதன் விளைவையும் ஓரார். புண்ணியம் இவை பாவம் இவை என்பதும் அறியார். எடுத்த பிறப்பில் உஞற்றும் சில நடைநொடிகளால்—செயல்களால் இறந்தவுடன் மோட்சம் அடைவது திண்ணம் என உறுதிகொண்டு அகம்பிரமிகளாய்ச் சாதலை எதிர்நோக்கி விற்றிருப்பர். இதனாற்றான் சில நூல்களைப் படிப்பதாலும், சில சரியை கிரியை உபாசனைகளை உஞற்றுவதாலும் இறந்தபின் (ஐ ஐயோ! பரிதாம்!) எளிதின் முத்தியடைந்து விடலாம்—சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்களில் ஒன்றையாவது அடைந்துவிடலாம் என வாய்ப்பறையறைந்து, அவற்றின் இலக்கணம் இன்னதென அறியாது, பலர் (மரணத்துக்கு ஆயத்தந்தான் என்று)மரணகாலத்தை எதிர்பார்த்து விற்றிருக்கின்றனர்.

வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் முதலிய நூல்கள் எல்லாம் உடலும் உயிரும் ஒழிவற ஒன்றித் தோன்றிய முறையே ஒடுங்குவதே வீடு பேறு என்பதை நன்றாக வலியுறுத்துகின்றன. (தைத்திரிய உபநிஷத் பிருகுவல்லி 1, 1 முதலியனவற்றை நோக்குக.) இதனை ஒருவன் அறிந்ததனால் ஆம் பயன் என்னை? வீடு பேற்றை அடைந்து விடுவானா? ஒருபோதும் முடியாது. திருவாசகம், திருமந்திரம், திருவாய்மொழி, ஔவை குறள், முதலிய தத்துவப் பெரியார் அருணூல்களும் சுத்தசாதகமும் உண்மை முத்தி இலக்கணம் இன்னது என வலியுறுத்துகின்றன. இந்நூல்களைக் கற்றதனால் — படித்ததனால் மாத்திரம் பயனை அடைந்துவிட முடியுமா? இல்லை, இல்லை, இல்லை. பயனை அடைவான் முயல்பவன் கைக்கொண்டு ஒழுகவேண்டிய ஆறுகள் வேறு வேறு — பலப்பல. இவை சீவர் எவராலும் கண்டு பிடிக்கப்பட முடியாதன என்பது சத்தியம்—வேத உண்மை. உலகத்திலே வாசா கைங்கரியங்களே பெரும்பாலன. அவைகட்கு ஏற்பப் பயனற்ற அறத்தாறுகள் பலப்பல. ஒருவன் பலர்க்கும் அன்னம் அளிப்பன்; தன் பொருளில் பெரும் பாகம் தருமத்துக்கென்று தியாகம் செய்வன்; கோயில், குளங்கள், மடங்கள், சத்திரங்கள், பாடசாலைகள் அமைப்பன்; சபைகள், சங்கங்கள், சமாசங்கள் நிறுவுவன்; செய்யுள் நூல்கள் உரை நூல்களை உஞற்றுவன்; உலக கீர்த்திகளைத் தருவனவாகிய இன்னோரன்ன பல கருமங்களைப்புரிவன்; வேடம் பூண்டு பூசை முதலியவும் புரிவன்; இம்மட்டோடு அமைதிபெற்று அடையவேண்டியவை அனைத்தும் தன் புண்ணியச் செயல்களால் அடைந்துவிட்டதாகத் துணிந்து செத்துப்போனதும் நேராக மோட்சமடைவது நிச்சயம் என உறுதி கொண்டு தனது செயல்களையெல்லாம் பலரும் அறியும்படி தந்திரமாகப் பிரசாரணம் செய்வன்.

இத்துணை அரிய பெரிய செயல்களைச் செய்தவனை ஆசான் வந்து நேரில் கண்டு "அப்பா! உனக்கு உண்மையை உபதேசிக்கின்றேன். நான் சொல்லுகிறபடி நீ நடக்கவேண்டும்" என்பானாயின், "ஆ! ஆ! ஈதென்ன பெரிய காரியமா? இவ்வளவு தருமங்களைச் செய்த எனக்குத் தங்கள் சொற்படி நடக்கிறது கடினமானதன்று" என்று கூறுவான். ஆசான் இவன் சொல்லைக்கேட்டு நகுவன். ஏன்? சீவர்கள் எத்தனையோ பெரிய காரியங்களையெல்லாம் செய்யத்துணிவார்கள். ஆனால் தங்களுக்கென்று வைத்திருக்கும் சுதந்திரத்தை—தற்சுதந்திரம் என்னும் இயற்கைத் தத்துவத்தை ஒருபோதும் விடமாட்டார்கள் — விடத்துணிய மாட்டார்கள்—விடமுடியாது. முடியாது என்றால் விடுவது அரிதினும் அரிது, மா கடினம் என்பது பொருளாகும். இது சீவ இயலுக்கு ஐ—சீவ இயற்கை. சீவ தத்துவம் இதுவே என்க. இஃது

ஒழிந்த இடமே சிவன் முத்தி நிலை என்க. ஆதலால் இது வாய்ப்பேச்சால் ஆவதன்று. சிவர்களால் கண்டுபிடிக்கப்படும் எவ்வகையான தந்திர மந்திர யோக சமாதிகளாலும் குட்டிக்கரணங்களாலும் ஆவதன்று.

“ஐந்து இந்திரியங்கள் உள்ளன. ஒன்றே ஐந்து துவாரங்கள்—ஒட்டைகள் வழியாக ஐந்து உணர்ச்சிகளை அறிகிறது. இவ் வழிகளில் நான்கு வகையான வழிகளையும் நீ வைத்துக்கொள். ஒரு வழியை மாத்திரம் என்னிடம் விட்டு விடு. அந்த வழி எது? என்றால், ரஸ இந்திரியம். அஃதாவது அருந்தல் என்னும் செயல். அதை மாத்திரம் என் வசம் விட்டுவிடு” என்று ஆசான் கேட்டால், உடனே “இதுதானா பெரிய காரியம்! அப்படியே செய்கிறேன்” என்பான். எத்தனை நாள் பட்டினி கிடந்து சாகச் சொன்னாலும் சாகத்துணிவான். ஆனால் இவன் தற்சுதந்திரம் என்னும் நிறை அறியா அவாவினால் பழகிக்கொண்டுத் தனக்கென அமைத்துக்கொண்ட ருசி (சுவை) என்னும் உணர்ச்சி பேதிக்குங்கால் இவன் சரீரம் பேதிக்குமன்றோ! பேதித்து அயர்வு பெறுமன்றோ! அஞ்ஞான்று இவன் அநுபவிக்கும்பையாப்பு அளவிடங்காதென்பது மிகையாமோ? ஆதலால் இந் நிலைமையைச் சகிக்க மாட்டாதவனாய், ஆசானை வசைமொழிகளால் தோத்திரஞ் செய்து, கூடுமானால் அவனை அடித்து—நையப்புடைத்து, “போடா மடையா! நீதானா ஆசான்! இதிலே தானா மோட்சம் இருக்கிறது? என் நாவுக்கு இணங்காதவற்றை தின்னச் சொல்லுகிறாய்! இவ் அவஸ்தையிலும் சாதல் மிகச் சுகமானது. என் நாவுக்குச் சுவையானவற்றை உண்டு நான் செத்துப்போகிறேன். எனக்கு முத்தியும் வேண்டாம் சித்தியும் வேண்டாம்!!!” என்று கூறி அவ் ஆசானை ஓட்டிவிடுவன்.

சித்தர் நூல்கள் அனைத்தும் இத்தகைய அநுட்டானங்களையே பலப்பல வகையாக முறையிடுவனவாகும். இச் சாதனங்களாலாய துன்பங்களை அறிந்தே தவித்துவப் பெரியார் யாவரும் பண்டைக் காலந்தொட்டே அந்நூல்களில் இலக்கணக் குற்றம்கண்டு அவற்றைப்புறக்கணித்து வந்தனர். இவர்கள் இன்மையை—நபும்ஸகத்தன்மையை மறைப்பதற்கு இலக்கணக் குற்றம் ஒரு சாட்டு.

மெய்யடியாரெல்லாம் முன்னிலைக் கோரணியால் ஆக்கமுறும் அவச்சலனங்களைப் பொருட் படுத்தாது திருவருணாட்டம் வகித்துச் சற்குருநாதன் அருளிய சாதகயோகங்களை வழுவறத் தாங்கி ஒழுகி மாயையை அடிப்படுத்தித் தமது தூலத்தை விமலமாக்குதற்கண் அடைந்த துன்பங்கள் நம்மனோர் சிந்தனை சொற் செயல்களுக்கு அளவுபடுவனவாகுமா? முன்னிலைகளால் அவர்கள் அடைந்த துன்பம் சிறிதாகுமா? அகிலமே மாயா சொரூபம் அல்லவா? சரீரமும் அன்னதே என்பதைக் கூறவும் வேண்டுமா? இம்மாயையை அடிப்படுத்துவதற்கே—தன் வசப்படுத்துவதற்கே ஆசானால் அருளப்படும்—அளிக்கப்படும் நிறையை நிறை என்னும் பயில்வைக் கைக்கொண்டு அசைய வேண்டும்—இயங்கவேண்டும் — ஒழுகவேண்டும் அல்லவா? அஞ்ஞான்று மாயா சொரூபமாகிய இச் சரீரம் அணு அணுவாக இரிந்து, இரிந்த அளவு திரியும் அல்லவா? மாற்றமடையும் அல்லவா? அகில உய்வின் பெட்பும் சுதீனமடையும் அல்லவா? இத்துன்பங்களின் பெற்றி எண்ணவும் ஆமோ? கூறவும் போமோ? அகில உய்வின் பெட்புக் கெட்டுத் திரியுங்கால் அதனால் அநுபவிக்கப்படும் ஆற்றொணாத் துன்பங்களை, ஆசான் மாட்டு வைத்த பூரண அன்பினால்—பூரண நம்பிக்கையினால், சகித்துத் தன் காரியமே கண்ணாகப் பயின்று ஆரோகணம் பெறவேண்டு மல்லவா? ஆதலால் இத்துனைக் கஷ்டங்களை விலக்கும் மார்க்கத்தை—வழியை—அறத்தாற்றைக் கடைப்பிடித்து, சகிப்பென்னும் வச்சிர கவசத்தைப் பூண்டு ஒழுக வேண்டும் என்றால், ஓ! ஓ! ஓ! மீசையுள்ள ஆண்பிள்ளையாக—ஆண்மையுடைய பிள்ளையாக—ஆண்டன்மையுடைய சிங்கமாக அல்லவா இருக்கவேண்டும்? வாய்ப் பேச்சால் ஆகும் காரியம் அல்லவே இது! வாய் வேதாந்தம் திண்ணைச் சித்தாந்தம் பேசி, அது இது, அப்படி இப்படி என்று கைசாடை, கண்சாடை காட்டி வாளா பிதற்றித் திரிவதனால் நித்தியானந்த சுகப் பேறு கிட்டுமோ? எட்டுமோ? ஒருபோதும் கிட்டாது; எட்டாது; முட்டித் தள்ளும் அல்லவா? ஆசான் உரைப்படி உணவுகளை நிறைகண்டு பஞ்சீகரணித்தற்கண் மெய்யடியாரெல்லாம் அடைந்த துன்பம் சிறிதாமோ? காராப் பூந்தி, லட்டு,ஜாங்கிரி, போளி,ஆமைவடை, பாயாசம், பாதுஷா, டில்லிதர்பார், பதாம்பேடா, பதர் பேணி, பாணிப்பணட்டு முதலிய பக்ஷணங்களை உண்டு களித்தற்கு ஒப்பானதா அம்மார்க்கத்தின் பண்பு? குருமாக்கறி, புலவு, கோளா, பிரிஞ்சி, பரோட்டா, பிரியாணி, சாமியா முதலிய மாமிச பதார்த்த வகைகளை உண்டு உவகையடைதற்கு ஒப்பான பெட்புடையதா முத்தி நெறி? அற்றன்று! அற்றன்று! அமல முதற்படி கண்டு தம் முள்ளே குருதரிசனம் பெறுதற்கண்—மாயையை அடிப்படுத்துதற்கண்—படிற்றுக்கையாகிய செடி சேருடலைச் செலநீக்கி எம்பெருமானைப் பூணுதற்கண் மெய்யடியார் அடைந்த துன்பம் நினைக்கவும் படுமா? சொல்லவும் படுமா? அயன் கையெழுத்தைக் கிழித்துக் காலனை உதைப்பது என்றால் உதைப்பவனுக்குக் கால் வேண்டாமா? அக்காலைப் பெறுவது எளிதின் முடியும் காரியம் ஆமோ? “ஆட்டுக் காலைத் தாரும்” என இறைவனை வேண்டி அதனைப் பெற்றுக் காலனை உதைத்து நித்தியத்துவம் பெற்றவன் முத்தத்தாண்டவன் அல்லவா? தூலத்தை அமலமாக்குதற்கண்—சூக்குமமாக்குதற்கண் உள்ள அருமை—

துன்பம் சீவர்கள் சிந்தனை சொற்செயல்களுக்கு அளவுபடுவதாகுமா ? இவ் அநுபவ உண்மைகளெல்லாம் ஆடவர் சிங்கமாகிய மணிவாசகன் அருளிய திருவாசகத் திருமறையில் கௌணமாகக் கூறப்பட்டுள்ளன என்பர். எவர் அறிவர்? இறந்த பின் எளிதில் முத்தியடைந்து விடலாம் எனக் குருட்டுத்தனமாக நம்பி வாழ்க்கை நடாத்தும் மாக்கள், ஆறறிவு பூரணம் பெற்ற மானிடனாய்த் தனது தூலத்தை அமலமாக்கி அதனோடு வானிற்கலந்த மணிவாசகன் அருளிய மறைகளை அறிவது எப்படி ? "ஈதென்ன? ஒன்றும் விளங்க வில்லையே! (Non-sense !)="அர்த்தமற்ற பொருள்" எனக் கூறித் தங்கள் அறிவின்மையை மறைக்க முயல்வர்; மறைத்து விட்டதாக நினைந்து அமைவர். தத்துவப் பெரியார் பாடல்களை —வேதங்களைக் கற்று அவற்றுட் புதைந்து கிடக்கும்- மறைந்து கிடக்கும் மகத்தான உண்மைகளை அகில சீவர்கள் அறிந்து கொள்வது முற்றாக அசாத்தியமே என்பதைச் சொல்லவும் வேண்டுமா? இதுபற்றியே வேதம் எல்லோரும் ஓதக் கூடாது என்ற விதி ஏற்பட்டது என அறிதல் வேண்டும். ஓதிப் பயனடைய முடியாது என்பதே பொருளாகும்.

உண்மை முத்தியடையும் பக்குவமுடையவன் முதலில் பவரோகவைத்தியனாகிய ஆசான் அருளும் விதிப்படியே தூலகற்பம் உண்டு பௌதிகத் தூய்மை அடைதல் வேண்டும். தூலகற்பம் அசித்துப் பொருள்:—அன்னம்—உணவு; (அருந்தல், பொருந்தல், அனந்தல்) மூலிகை வர்க்கம், பாஷாண வார்க்கம், லோக வர்க்கம், உப்பாதி உபரச வர்க்கங்கள் என்பனவாம். தூலகற்பம் உண்டு பௌதிகத் தூய்மை அடைந்தவரே ஆறறிவு பூரணம் பெற்ற மானிடராவர்—மக்களாவர். "மக்கள் தாமே ஆறறிவுயிரே" என்பது தொல்காப்பியம். இவ்வாறு தொல்காப்பியம் கூறியும், இருகாற் பசுக்களையே—படிப்பு வேடம் அதிகாரம் முதலியவற்றால் இலௌகிக உந்நத நிலையில் வீற்றிருப்பவரையே — வீற்றிருந்து மாண்டு போனவரையே மக்கள் எனக் கருதினர் உலகோர்.

உலகில் ஒழுங்காக—தமது பௌதிக நிறை அறிந்து உணவு கொள்பவரைக் காண்பதே மிக அரிது. அதி தீவிர பக்குவமுடையோராலன்றி ஏனையோரால் இஃது அநுட்டிக்க முடியாததே. தன் சரீர இயல்பறிந்து நீராடல், எண்ணெய்யையாவது வேறு கற்கங்கள் ஒருங்கு சேர்த்து முடிக்கப்பட்டனவற்றையாவது உரிய காலங்களில் தேய்த்து ஸ்நானஞ் செய்தல், இனமான உணவுகளை நிறை அறிந்து உண்ணுதல், மூலிகை பாஷாண லோக உப்பு உபரச வர்க்கங்களில் தன் சரீரத்துக்குப் பொருத்தமானவைகளை—இனமானவைகளைக் கண்டு பூத பௌதிக பஞ்சீகரண பேதங்களைச் (திணை மயக்கம்) சமப்படுத்த வேண்டிய நிறையையும் கண்டு அதற்கேற்பப் பக்குவஞ் செய்து உண்டு பத்தியங் கொண்டு ஒழுகி வருதல் முதலியனவே வாய்மையான இயமம் நியமம் என அறிதல் வேண்டும். மிக விரிவும் கடினமுமான அத்தியாயம் இது.

இவ்வாறு ஒழுகிவரின், நிலையாமையுடைய உடலுயிர்க்கு அணு அணுவாக நிலையுண்டாகும்—நிலைக்கும் தன்மை உளதாகும் என்பது. மன ஒருக்கமும் தியானமும் தாரணையும் சிறிது சிறிதாக நிறை கொள்ளும். ஒவ்வொன்றாக அநுட்டித்து ஒவ்வொன்றாகத் தாண்டுவதென்பது அறியாமையுடையார் வழக்கு. "துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை"யராய் உடலுயிரை வாட்டி வருத்தித் தவம் புரிவோர் இவ்வுண்மைகளை அறிதல் முடியாத காரியம். நூல்களில் கூறப்பட்டன வெல்லாம் வாய்மை நெறி ஒன்று இருக்கிறது என அதனை அறிந்து கொள்ளும் ஆற்றல் உளதாதற்குச் சாதகமேயன்றி அவைகளே நேரே முத்திவாயிலில் சேர்ப்பிக்க மாட்டா என்பது வெள்ளிடை. நெறியல்லா நெறிகளைக் கொண்டே உண்மை நெறி ஒன்று உண்டு என அதனை அறிதல் முடியும் என்க.

ஆன்மா அவா வடிவினது; ஆதலின் தொட்டவுடன் இனிக்கும்படியான—தன் நாவுக்குச் சுவையான பொருள்களையே நிறையும் இனமும் அறியாது உண்டுபின்பு வருந்தும்இயல்புடையது. ஆசான் விதிக்கும் நிறையோ என்றால் தொட்டவுடன் எட்டிக் கசப்பும் நாவுணர்ச்சிக்கு மாறானதும் பின் அழியாத பேரின்ப சுகத்தைத் தரவல்லதுமாகும். இவ்வுண்மைகளையெல்லாம் கௌணமாக அமைத்து—மறைபொருளாக வைத்து அருளியது மணிவாசகசிவம்.

திருவாசகம்

நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை
[குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்
[செய்து நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத்
[தெழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி ஆண்டுதன் னடியரிற் கூட்டிய
[அதிசயங் கண்டாமே.

(ஷை—அதிசயப்பத்து செ. 8,)

எனவும்

தையலார் மையலிலே தாழ்ந்து விழக் கட
[வேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந்
]தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத்
[துட்பொருளை
ஐயனெனக் கருளியவா றார்பெறுவா
[ரச்சோவே.

(ஷை அச்சோப்பதிகம், செ. 7.)

எனவும் வரும் திருமறைகளை நோக்குக.

அறிவதும் எளிது! உணர்வதும் எளிது! உணர்ந்ததைப் பிறர்க்குரைப்பது மிக எளிது! உணர்ந்தவாறே ஒழுகுவதெனிலோ — வினையில் ஏதி

இயங்குவது எளிலோ? அரிது! அரிது! மா அரிது என்க.

குறள்

சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லியவண்ணஞ் செயல்.

(ஷை–67ம் அதி.–வினைத் திட்பம் செ.4.)

என்றனர் பொய்யில்புலவர். ஆதலால் உண்மை முத்தியடைவது எளிது என எண்ணி அமைவது தவறு. முடியாத காரியம் என நினைந்து சோம்புவதும் இழுக்கு.

தூல கற்பமுண்டு ஆறறிவு பூரணம் பெற்ற மானிடரே சூக்கும கற்பமுண்ண அருகராவர். சூக்கும கற்பம் சித்துப் பொருள். அமல ஐகார ஒலி எனப்படும் வேதம் இதுவே என்க. ஆசான் அருளால்சூக்கும கற்பத்தைப் பெற்றுஉண்டுஉண்டுபதியாகியமதியை—மதியாகிய ஆசானை—ஆசானாகிய பெருந்துறையானைப் பற்றவேண்டும்—பற்றிப்படியேற்றம்பெறவேண்டும். படியேற்றம் பெறுங்கால் அசுத்த நிறையாகிய பாசம் அணு அணுவாக நீறும். படி, அணி, வரை, அங்கம், ஆதாரம் என்பன ஒருபொருட் கிளவி. இவை கீழ் ஆறு மேல் ஆறு எனப் பன்னிரண்டாகும். இவ் ஆதாரங்களையே வேத அந்தத்தையும் சித்தின் அந்தத்தையும் சமரசமாகக் கண்ட சித்தர் பெருமக்கள்—வேதாந்த சித்தாந்த சமரச நிலைபெற்ற வித்தகச் சித்தர்கள் வரைகள் எனக் கூறினார்கள் என்க. உலகில் நூல்களாய் முன்னிலையில் விளங்கும் அங்கம் வேதம் முதலியன இடுகுறியாம். வாய்மையான வேதம்முதலியவற்றின் உண்மைகளைத் தத்துவப்பெரியார் திருவாக்குக்களாகிய வேதநூல்களில் கண்டு தெளிக. [திருமந்திரம்,பாயிரம் 3வது வேதச் சிறப்பு செ. 5; ஷை 3ம் தந், 1வது அட்டாங்க யோகம் (7வது தியானம்) செ. 58, 59, 60 ; ஷை 8ம் தந், 3வது அவத்தை பேதம் (11வது நின்மலாவத்தை) செ. 176.] "வித்தகம்" இல. 10 இல் "நாதம்" என்னும் கட்டுரையையும் நோக்குக.

ஏழாவது படிதான் சப்தஸ்தானம். ஒலியாகிய நாதம் தச நாதம் கிண்கிணி நாதம் வீரகண்டாமணிச் சிலம்பொலி நாதம் (தியாகர் பாதத்தில் ஒலிக்கும் நாதம்) பஞ்சநாதம் சங்க நாதம் (பஞ்சநதம்—இடுகுறி ஐயாறு என்னும் திருஅடித்தலம்)பறை நாதம் முதலிய நாதங்களைக் கடக்க வேண்டும். சங்க நாதம் பறை நாதம் என்பன கடப்பது மிக அரிது எனவும் இக்காலத்தில் பலவித கர்மங்களின் போராட்டம் மிக அதிகம் எனவும் பெரியார் கூறுவர். இந்தச் சூக்கும கற்பத்தை ஒருவன் குருவருளால் உண்பானாயின் அவனுக்குச் சாதல் ஏது? உடம்பை வாட்டி வருத்தித் தவம் புரிந்து அசுத்த நாதங்களையே சுத்த நாதங்கள் என அமையும் சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர் இவற்றை அநுபவமாக அறிதல் முடியாத காரியமே. சுத்த நாதமாகிய சூக்கும கற்பமே தூலத்தை அமலமாக்குவது. மேலே கூறிய உபாசக நிட்டையாளர் மேலே கூறிய அசுத்த நாதங்களைக் கேட்டுக்கொண்டு எத்துணைக் காலம் தவம் புரிபவரேயாயினும் அவர் உடலைத்து அசுத்த நிறையே ஆக்குமுறுதலால், வாத பித்த சிலேத்துமங்களின் நூன மிகுதியால் தூலம் பிணமாகி விழ இறந்து பிறப்பவரே யாவர். இதன் விரிவை "நாதம்" என்னும் கட்டுரையில் (வித்தகம்: இல—10) காண்க.

நன்கொடை.

"வித்தகம்" எனும் எமது பத்திரிகைக்கு மனமுவந்து நன்கொடையாக ரூபா மூன்று அளித்த சிலோன் (Ceylon) அநுராதபுரம் (Anuradhapura) ஆஸ்பத்திரி (Hospital) திருவாளர் சி. ஈ. எப். அமரசேகர் (C. E. F. Amarasekere) அவர்களுக்கு எமது மனமார்ந்த வணக்கம் என்றும் உரிமையாகற்பாலது.

[ப–ர்]

தூல கற்பமுண்டு பௌதிகத் தூய்மை அடையாத இன்னோர் ஆறறிவு பூரணம் பெற்ற மானிடராய்ச் சூக்கும கற்பம் உண்டு நித்தியத்துவம் அடைதற்கு அருகராகார். மகர வித்தையாகிய மௌன வித்தையை ஆசான் அருளால் உணர்ந்து நன்கு பயின்று சகச நிட்டை கைவரப் பெற்றவரே—சூக்கும கற்பம் உண்பவரே தமது தூலம் அள்ளுருக்கையாய்ச் சூக்குமமாய் (ஓ வடிவம்) ஞானகாசத்தில் மறைந்து மீண்டு வாரா உண்மை நிலையை அடைய வல்லராவர்.

எட்டாவது படியாகிய இடம் லலாட புருவமத்தி — சுத்த நந்தி நாதம் ஒலிக்கும் இடம். உபாசக நிட்டையாளர்—சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர்க் குரிய சுழினைக்கும் இதற்கும் இடையீடு மிகப்பெரிது. சுத்த நந்தி நாதமே "பெருந்துறைக் கோன் முன்பால் முழங்கும் முரசு" என மணிவாசகரால் பணித்தருளப்பட்டது. (திருவாசகம், திருத்தசாங்கம் செ. 8) இதனையே அருளமுதம் எனவும், இதனை அருந்துவோரே—அநுபவிப்போரே தமது தூலம் கரைந்து அருவமாகப் பெறுவார் எனவும் வேதம் முறையிடுகின்றது. இவ் ஒலியே சிவம்— சிவ வடிவம், "மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென் மனத்திடை மன்னிய மன்னே" என்பது திருவாசகம். "ஓசையும் ஈசன் உணர வல்லார்க்கே" (திருமந்திரம்) எனவும், "அரவொலி ஆகமங்கள் அறிவாரறி தோத்திரங்கள், விரவிய வேத ஒலி விண்ணெலாம் வந்து எதிர்ந்திசைப்ப" (சுந்தரர் தேவாரம்) எனவும் அருளப்பட்டனவற்றையும் நோக்குக. வேதம் சிவ சந்நிதானத்தில் ஒலிப்பது என்பதன் உண்மையும்

இதுவே. அமல ஐகார ஒலி—எழுதாமறை என்பதும் இதுவே. சூக்கும கற்பமாகிய இந்நாதங்கள் நமது சரீரமாகிய ஆலயத்துள்—பூமியுள் ஓவாது ஒலித்துக்கொண்டு இருக்கின்றன. அங்கங்களாகிய வரைகளையும் அவற்றின் இரகஸியங்களையும் குருநாதன் வாயிலாக உணர்ந்து அவற்றை ஒவ்வொன்றாகக் கடந்து அப்பால் சப்த சுரங்களாய் ஆரோகண அவரோகணமாய் ஆதி நடு அந்தமாய் அந்தம் நடு ஆதியாய்க் கெதி மாறி மெய்யடியார்களாகிய தமிழர்கள் மணிடற்றும் அஃதாவது நெஞ்சமாகிய கண்டத்தும் சகல சீவராசிகளிடத்தும் அங்கும் இங்கும் எங்குமாய் ஓவாது ஒலித்துக்கொண்டிருக்கும் வேதங்களை ஓதி உணர்ந்து அவற்றைக் கண்டு கண்டு கடந்து, அவ்வேதங்கள் ஒலிக்கும் இடமாகிய—உற்பத்திஸ்தானமாகிய நாதபீடம் என்னும் உத்தரகோசமாகிய வடபாகத்தையும் தெரிந்து, அவ் உத்தர தேசம் என்னும் உத்தர கோசத்தில்—கயிலையங்கிரியாகிய மேரு அந்தத்தில்—வேத அந்தத்தில் (அந்தம்=ஒலியின் ஈறு; அந்தம் அடி முடி என்பன ஒன்றே.) ஏறி, அம்மேரு உச்சியில் விளங்கா நின்ற திருவருட் சோதிப் பிழம்பாகிய ஆரியனைக் கண்டு கலப்பது தான்—ஆரியனாவது தான் சித்தின் அந்தம். அஃதாவது சித்தாகிய ஆவி-உயிர்—சிவன் அந்தமாகிய ஈற்றில் — சிவத்தில் கலப்பதென்பது.

இவ்விடத்தன்றோ இச்சீவன் தோண்டனாகிய தமிழன் என்னும் பெயர் மாறி அந்தணனாய் ஆரியன் என்னும் சீரிய திருநாமம் பூண்டனன் என்க. இவ்விடத்தன்றோ வேதாந்தம் சித்தாந்தம் என்னும் இரண்டும் சமரசம் பெற்றன! வாய்மையான வேதாந்த சித்தாந்த சமரஸம் இதுவே என அறிதற்பாற்று.

உலகில் வழங்கும் சில நூல்களின் சாரமாகிய முடிபையே வேதாந்த சித்தாந்த சமரசம் என்பது உலகியலாகிய போலி வழக்கேயாகும்.

மேலே கூறிய வாய்மையான வேதாந்த சித்தாந்த சமரச நிலை பெற்ற வித்தகச் சித்தாகிய மெய்யடியாரே சிவன் முத்தர் என அறிக. இவர் இயல் எல்லாம் மேலும் விரிப்பின் மிக விரியும். அமயம் நேர்ந்துழி விரித்துக் கூறப்படும். தமது தூலம் பூரண அமலமடைந்து சூக்குமமாய்—ஒ வடிவமாய் அருளாகிக் கரைய மறைந்து உண்மைச் சைவமுத்தி அடைவோர் இவரே ஆவர்.

இதுகாறும் கூறியவைகளால் அடியார் இயலும், உடலுயிரை அமலமாக்கி அன்னவர் அடையும் நித்தியத்துவமாகிய உண்மை முத்தியின் அருமையும் பிறவும் ஒருவாறு உணரப்படும்.

கடபம்.

வித்தக மதிப்புரை

திருக்கழுக்குன்றம்

வரகவி. கன்னியப்ப முதலியார்

அவர்கள் வழங்கியது.

புதுவை நகர்ப்பிறந்து புத்தமுதாய்ப் [போங்கும்
அதியோக வித்தகமே ஐய! நிதிபோன்
மறைந்ததமிழ் மாமணமு மாதேவன் [மாண்பும்
திறந்தபெருஞ் சிஷ்டனெனச் செப்பு.

அன்புமிக்கீர்! வந்தனம் பல! இந்நில உலகில் தமிழ் வளர்ந்தேக்கும் பகுதியில் பற்பல பத்திரிகை உலவுவது கண்கூடே. அவற்றில் நவீன நாகரீகம் பொங்க மிகுதியான அகடம், விகடம், பந்தயம், புறதேசவர்த்தமானம், இராசாங்க வர்த்தமானம், சாமான்களது விக்கிரயப்பட்டி என்பன மலிந்து இன்னும் அநேக காலப் போக்கு விஷயங்கள் நிரம்பியும் இருப்பது "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்பது போலும்! இவ் "வித்தக"மோ நாம் ஆர்? நாம் செய்ய வேண்டுவது என்ன? என்பவைகளையும், நம்மை இங்கு இயங்கியற் பொருளாய் வைத்து அதற்காக வேண்டிய உதவி உபகரணங்களைச் செய்து வைத்த பரமனை வழிபடு மார்க்கங்களையும், தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலிய திருமுறைகளின் உண்மைப் பொருளையும் தெளிவுற விளக்கிக் காட்டி இயலுகின்றது. இத்தகைய உழைப்பில் ஈடுபட்டு ஒழுகும் இதன் ஆசிரியர் ஸ்ரீமாந். ச. கந்தைய பிள்ளையவர்கட்கும் இவருடன் ஒத்துழைக்கும் இவரது நேயர்களாகிய வியாசகர்த்தர்கட்கும் எனது மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகின்றேன்.

இங்ஙனம்,

வரகவி, கன்னியப்ப முதலியார்

திருக்கழுக்குன்றம்.

குறிப்பு:—இம்மதிப்புரையை மனமுவந்து உதவிய வரகவி, ஸ்ரீமாந். கன்னியப்ப முதலியார் அவர்களுக்கு எமது மனமார்ந்த வணக்கம் உரியதாகுக.

[ப—ர்.]

——o-o——

"வித்தகம்"

பழைய பிரதிகளின் கிரயம்

1-வது நெம்பர் தனிப்பிரதி விலை அணா 4.

2-வது ,, ,, ,, 4.

3-வது முதல் 20-வது வரையில் பிரதி ஒன்றுக்கு விலை அணா 2.

வேண்டுவோர் தபால் முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வித்தகம் ஆபீஸ்.

புதுவை.

உடலுயிர்ச் சம்பந்தம்

(29-ம் வாரத்தொடர்ச்சி)

மிகினுங் குறையினு நோய்செய்யு [நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

எனவும்,

மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு.

எனவும் வரும் தேவர் வாக்குக்களை யும் நோக்குக.

இடை கட்பாளர் முன்னிலைப் பொருள்களில் தமக்கு இனமாயவற்றைப் பகுத்தறிந்து உண்டு தமது தூலத்தை அமலமாக விளக்கும் ஆற்றலுடையவர். கடை கட்பாளர் அளவும் இனமும் அறியாது இச்சைப்பட்டவற்றையெல்லாம் உண்டு அதனால் அவச்சலனமடைந்து ஆகாமியங்களை ஈட்டித் தூலம் பிணி மூப்புக்களால் பழுதடைந்து விழ இறத்தல் கண்கூடு.

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.

(இ-ள்) பாத்து ஊண்மரீ இயவனை—முன்னிலையாகிய உணவுப் பொருள்களில் தன் சரீர இயல்புக்கு இனமானவை இன்னவை என்று அறிவால் பகுத்து உண்ணுதல் பொருந்தப்பெற்றவனை பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது — அழிபசி உறுபசி என்னும் கொடிய நோய்கள் அடைதல் இல்லை என்பது.

அழிபசி—மானம் முதலியன அழிவரும் பசி. உறுபசி—மிக்க பசி.

நமது சரீரமாகிய பூமியில்—ஆலயத்தில் விளங்கும் சாண்வட்டகுண்டம், ஓமகுண்டம், வைகுண்டம், பாகசாலை, பாகசாலை, பாத்திரம் முதலிய எத்தனையோ திருநாமம் பெற்ற பாத்திரத்தில் வளர்ந்தெழுகின்ற தேயுவுக்கு அப்பாத்திர இயல்பு அறிந்து ஏற்ற ஆகுதி கொடுத்தால் அத்தேயுவாகிய மூலாக்கினி அமலமடையும், அதனால் உறுப்புக்கள் சுத்தமடையும். தூலம் அநந்தமின்றி — நோயின்றி விளங்கும். அழிபசி உறுபசி என்பன அடையப்பெறு. உணவுப் பொருள்களில் தன் சரீரத்துக்கு இனமானவை இன்னவை என அறிவால் பகுத்து உண்ணுதல் கைவரப் பெற்றால்பழி இல்லை. பாவம் இல்லை.பாவம் என்னும் தீவினையாலாய அழிபசி உறுபசி என்பன இல்லை என அறிவுறுத்துகின்றார் தேவர். இத்தன்மை வாய்த்தவரே அழுக்கற்றவர்; நல்லது தீயது பொருத்தமுடையது பொருத்தமில்லது என்பவைகளைப் பகுத்தறிந்து ஏற்றவைகளை உண்டு உய்யும் ஆற்றல் உடையவர்; சாதலுக்கு இடந்தாராதவர். சிவகோடிகள் பாவம் இது புண்ணியம் இது எனவும் சிவகாருண்ணியம் இன்னது எனவும் அறியமுடியாமல்(மிருகம், பறவை முதலிய வற்றின் ஊனை அருந்தாதிருத்தலே சிவகாருண்ணியம் எனத்துணிந்து அஃதாவது மாண்டுபோன புத்தன் முதலியோர் கண்டு பிடித்த பொலிச் சிவகாருண்ணியத்தையே நித்தியத்துவம் அடைதற்கேற்ற உண்மைச் சிவகாருண்ணியம் எனத்துணிந்து) அக்கொள்கைகளையே அநுட்டித்துச் சாதலடைகின்றார்கள். இதன் திறமெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும். அமயம் நேர்தழி விரித்து விளக்கப்படும்.

(தொடரும்)

சுத்தசாதகம் விலை அணா 2
திருவாசக உண்மை
விலை அணா 2

வித்தகம்

முதல் வருட ஆறுமாத சஞ்சிகைகள் புத்தகமாக கட்டப்பட்டன.

		ரூ. அ. ப.
முதுகில் தோல்—கலிக்கோ (Half Leather—Calico Bound)	...	2 8 0
முழு கலிக்கோ— (Full Calico Bound)	...	2 4 0
முதுகில் கலிக்கோ—மார்பில் தாள் (Calico-marble Bound)	...	2 0 0

(தபால் செலவு பிரத்தியேகம்)

வித்தகம் ஆபீஸ்,
புதுவை.

Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant, R.Nagarattinam